**பிரிவு 74. பெண்ணின் மானத்துக்கு பங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் தாக்குதல் அல்லது குற்றமுறு வன்முறை. (Assault or use of criminal force to woman with intent to outrage her modesty)**

பெண்ணின் மானத்துக்கு பங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் அல்லது அது அவ்வாறு நேரக்கூடும் என்று அறிந்து கொண்டு, எந்தவொரு பெண்ணின் மீதும் தாக்குதல் அல்லது குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்துபவருக்கு, (Assault or use of criminal force)

ஒரு வருடத்திற்கு குறையாத, ஆனால் ஐந்து வருடங்களுக்கு நீட்டிக்கப்படக் கூடிய ஒரு காலத்திற்கு, ஏதேனும் ஒரு வகை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட வேண்டும்.

**சட்டங்களின் ஒப்பீடு**

இந்திய தண்டனைச் சட்டம்,1860, பிரிவு 354, மாற்றமில்லாமல், பிரிவு 74 என இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

**குற்றத்தின் வகை:** புலன்கொள் குற்றம், பிணைவிடாக் குற்றம். ஏதாவது ஒரு நடுவர்.

**சட்டப் பிரிவு என்ன சொல்கின்றது**

இந்தப் பிரிவு பெண்ணின் மானத்துக்கு பங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் தாக்குதல் அல்லது குற்றமுறு வன்முறை பயன்படுத்துபவர்களுக்கு தண்டனை வழங்குகின்றது.

**'மானம்': உச்ச நீதிமன்றம்: அமன் குமார் எதிர் ஹரியானா மாநிலம் (Aman Kumar vs State of Haryana: AIR 2004 SC 1497)** 'மானம்' என்ற சொல் இந்திய தண்டனை சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. மானம் என்பது அடக்கமான மற்றும் பெண்களுடன் தொடர்புடைய குணமாக விவரிக்கப்படலாம். பெண்களுக்கே உரித்தான, பழிபாவத்திற்கு அஞ்சுகிற சுயகட்டுப்பாடு, நடத்தை சிந்தனை, பேச்சு (womanly propriety of behaviour; scrupulous chastity of thought, speech and conduct) எனக் கூறலாம்.

**வயது முக்கிமானதல்ல:** ஒரு பெண்ணின், மானத்தின் சாராம்சம் அவளுடைய பாலினம். இது ஒரு பாலினம் காரணமாக, வயதைப் பொருட்படுத்தாமல், பெண்ணுடன் இணைந்திருக்கும் நல்லொழுக்கம் தொடர்பானது. குற்றம் சாட்டப்பட்டவரின் குற்ற நோக்கமே இந்த விஷயத்தின் முக்கிய அம்சமாகும்.

**பழக்க வழக்கங்கள்:** ஒரு பெண்ணின் மானத்துக்கு எதிரானது என்பது மக்களின் பழக்க வழக்கங்களைப் பொறுத்தது. பெண்ணின் மானத்தை அளவிடுவதற்கு குறிப்பிட்ட அளவு கோல் எதுவும் இருக்க முடியாது. ஏனெனில், இது நாட்டிற்கு நாடு அல்லது சமுதாயத்திற்கு சமுதாயம் மாறுபடும்.

குற்றவாளியின் செயல், ஒரு பெண்ணின் கண்ணியமான உணர்வை அதிர்ச்சியடையச் செய்யும் செயலாக இருந்திருக்கும் பொழுது, ஒரு பெண்ணின் மானம், தாக்கப்பட்டது அல்லது அவமதிக்கப்பட்டது என்பதை உறுதி செய்யலாம்.

**தர்கேஷ்வர் சாஹு எதிர் பீகார் மாநிலம் (Supreme Court: Tarkeshwar Sahu vs State of Bihar; 2006 8 SCC 560)**

- ஒரு பெண்ணின் பின்புறத்தில் தட்டுவது, அவளது மானத்தை அவமதிப்பதாக இருக்கும். ஏனெனில், இது பெண்ணின் ஒழுக்கத்தின் சாதாரண உணர்வை அவமதிப்பது மட்டுமல்லாமல், அந்த பெண்ணின் கண்ணியத்தை அவமதிப்பதும் ஆகும்.

**தோலுடன் தோல் தொடர்பு (Skin to skin): உச்ச நீதிமன்றம்: இந்தியாவிற்கான அட்டர்னி ஜெனரல் எதிர் சதீஷ் (Attorney General for India Vs. Satish; AIR 2022 SC 13)**

**உயர் நீதிமன்றம்:** இந்த வழக்கில், பாதிக்கப்பட்ட பெண்ணை, குற்றம் சாட்டப்பட்டவர் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றதாகவும், பாதிக்கப்பட்ட பெண்ணின் மார்பகத்தை அழுத்தியதாகவும், மேலாடையை கழற்ற முயன்றதாகவும், 12 வயதுக்குட்பட்ட குழந்தையின் வாயை அழுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர் குறித்து பாதிக்கப்பட்ட பெண் மற்றும் அவரது தாயின் வாதத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

- குழந்தையின் சட்டையின் மேற்புறம் அகற்றப்பட்டதா அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் கைகளை உள்ளே நுழைத்து மார்பகத்தை அழுத்தினாரா என்பது குறித்த குறிப்பிட்ட விவரங்கள் இல்லாத பட்சத்தில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், (POCSO) 2012, பிரிவு 7ன் கீழ் பாலியல் வன்கொடுமை என்ற வரையறைக்குள் வராது என தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம், இந்திய தண்டனைச் சட்டத்தின் 354வது பிரிவின் கீழ் (இந்தச் சட்டத்தில் பிரிவு 74) குற்றத்தின் வரையறைக்குள் வரும் என குற்றவாளியை தண்டித்தது.

**உச்ச நீதிமன்றம்:** பாலியல் நோக்கத்துடன் "தோலுக்கு தோலுடன்" நேரடியான உடல் தொடர்பு இல்லாததால் எந்த குற்றமும் இல்லை என்று உயர் நீதிமன்றம் கூறியது தவறு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (POCSO) -ன் கீழ் தண்டித்தது.